# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஒழுங்கு முறை நடவடிக்கை வழக்குகள் - கடினமான குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரணை நிலுவையில் உள்ள போது இடைக்காலப் பணி நீக்கம் பற்றி சீராய்வு - ஒழுங்கு நடவடிக்கைகளை இறுதி செய்ய கால வரை - அறிவுரைகளின் தொகுப்பு - வழங்கப்படுதல்

---

## மனிதவளம் மேலாண்மைத்(ல) துறை

அ.ஆ.(நிலை) எண். 81

நாள்: 04.08.2022
சுபகிருது, ஆடி 19,
திருவள்ளுவர் ஆண்டு 2053.

**படிக்கப்பட்டவை:**

1. கடிதம் (நிலை) எண். 1118 பணித் தொகுப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (பணி-ல) துறை நாள் 22.12.1967.

2. ஆரசாணை (நிலை) எண். 40, பணித் தொகுப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (ல) துறை நாள் 30.01.1996.

3. கடிதம் எண். 13519/ல/2015-1, பணித் தொகுப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (ல) துறை நாள் 23.07.2015.

4. கடிதம் (நிலை) எண். 43/ல/2015-3, பணித் தொகுப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (ல) துறை நாள் 26.04.2016.

5. மேன்மை பொருந்திய மெட்ராஸ் உாய்நீதிமன்ற இருவர் அமர்வு நீ.மே.எண். 646/2021 நாள் 15.09.2021.

6. கடித எண். 01/ப மற்றும் நி.சி.துறை/த.கா./உ.நீ.ம./2022, நாள் 22.04.2022, தமிழ்நாடு கூடுதல் அட்வகேட் ஜெனரல்-1.

7. அட்வகேட் ஜெனரல், தமிழ்நாடு கடிதம் ROC எண்.700/AGRS/2022 நாள் 26.04.2022.

*****

**உத்தரவு:-**

மேல் முதல் படித்த அரசுக் கடிதத்தின்படி தக்க புலனாய்வு அதிகாரிகள் / ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் ஒழுங்கு

நடவடிக்கையை நடத்தவும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளை இறுதிப்படுத்தவும் ஒழுங்கு நடவடிக்கையின் ஒவ்வொரு நிலையிலும் கால வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. இரண்டாவதாகப் படித்த அரசாணைப்படி ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளை இறுதி செய்வதற்கான கால வரை நிர்ணயம் செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் தக்க நிலைகளில் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளை சீராய்வு செய்து இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை, அதன்படி இடைக்காலப் பணி நீக்கம் திரும்ப நீக்கப்பட்டு பணியில் திரும்ப அமர்த்துவது பற்றியும் அதே சமயம் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கவும் அல்லது இடைக்காலப் பணி நீக்கம் தொடரவும் என்பதை முடிவு செய்தல்.

3. இதன் அரசுக் கடிதம் மூன்றில் படிக்கப்பட்டபடி “அஜய்குமார் சௌத்திரி எதிர் இந்திய யூனியன், பிரிதிநிதியாக செயலாளர் மற்றும் மற்றவர், உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 1915/2012 (SLP (C) No. 31761 of 2013)ன்படி எழுந்தது உத்தரவு நாள் 16.12.2015 வழக்கில், மேன்மை பொருந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளின் அடிப்படையில், தலைமைச் செயலகத் துறைகளும், மற்றும் துறைத் தலமைகளும் மேன்மை பொருந்திய உச்சநீதிமன்ற உத்தரவுகளை இடைக்காலப் பணி நீக்கத்தின் கால வரம்புகளை உண்மையுடன் தவறாது கீழ்க்கண்டவாறு பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்:-

(i) குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் / பணியாளர் மீது குற்றச்சாட்டுக் குறிப்பாணை / குற்றச் சாட்டுகள் இந்தக் காலத்தில்

வழங்கப்படாத நிலையில் இடைக்காலப் பணி நீக்க உத்தரவு மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்கப்படலாகாது.

(ii) ஒரு சமயம் குற்றச்சாட்டு குறிப்பாணை / குற்றப் பத்திரிக்கை, சேவை செய்யப்பட்டு விட்டால் இடைக்காலப் பணி நீக்கத்தை நீடிப்பு செய்து ஒரு தக்க உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

4. அதன்பின், ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளின்படி, ஒழுங்கு நடவடிக்கையின் அளவு கண்காணிப்பு வழக்குகள் / குற்ற நடவடிக்கை வழக்குகளில் எழக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைகள், மற்ற ஒழுங்கு நடவடிக்கைகளைவிட மிக அபாயகரமாக அதிகமாயிருப்பின் மற்றும் லஞ்ச வழக்குகளின் தன்மைகளை ஆராய்ந்து, இதில் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தரவுகளின்படி, மூன்றாவது கடிதத்தில் குறிப்பிடப்பட்ட இடைக்காலப் பணி நீக்க உத்தரவின் கால வரை, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் / கண்காணிப்பாளரல்ல விசாரணைகளுக்கு மட்டுமே பொருந்தும் மற்றும் / அல்லது அரசுக் கடிதம் நான்காவது படிக்கப்பட்டபடி குற்றவியல் இல்லாத வழக்குகளுக்கே பொருந்தும்.

5. மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு 15.03.2022 அன்று பிறப்பித்த பொது உத்தரவில், நீ.பே. மனுக்கள் 2165/2015 மற்றும் 21628/2018களில் வழக்கு P. கண்ணன் மற்றும் மற்றையர் எதிர் ஆணையர் நகராட்சி நிர்வாகங்கள் சம்பந்தமாக, கீழ்க்கண்டவாறு நிலைப்படுத்தியது:-

“(i) அஜய்குமார் சௌத்திரி மேலுள்ள வாரன வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய திர்ப்புரையில் சட்டத்தின் சுத்தமான நிலைப்பாட்டை வழங்கப்படவில்லை; ஒரு இடைக்காலப் பணி நீக்க

உத்தரவு மூன்று மாத காலத்திற்குப் பின்னும் தொடர இயலாது; ஒரு சமயம் குற்றச்சாட்டு குறிப்பாணை / குற்றச்சாட்டுப் பத்திரிக்கை மூன்று மாத காலத்தில் வழங்கப்படாமலிருந்தால், ஒரு சமயம், குற்றச்சாட்டுக் குறிப்பாணை / குற்றப் பத்திரிக்கை மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட்டு விட்டால் அல்லது இடைக்காலப் பணி நீக்கத்தை நீடித்து தக்க உத்தரவு வழங்காமல் குற்றச்சாட்டுக் குறிப்பாணை / குற்றப் பத்திரிக்கை வழங்கப்பட்டால்.

xxxxx xxxxx xxxxx xxxxx

(iii) இடைக்காலப் பணி நீக்கத்தை எதிர்க்கும் பிரச்சனையில் ஒவ்வொரு வழக்கின் பொருண்மை பற்றியும் ஆராய வேண்டும்; அதன்படி குற்றத்தின் கடுமையளவு மற்றும் அதற்குப் பொருந்தக் கூடிய விதிகள் பற்றி ஆராய வேண்டும்.

(iv) பணியமர்த்துபவரின் உத்தரவுப்படி இடைக்காலப் பணி நீக்கம் திரும்பப் பெறப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட வரை ஒரு முக்கியத்துவம் இல்லாத பதவியில் அமரச் செய்ய மேலொப்பமிடலும் அல்லது உத்தரவிடலும் ஒரு முக்கிய சங்கதியல்ல. இது ஒவ்வொரு வழக்கிலும் சம்பந்தப்பட்ட அடிப்படைத் தன்மை மற்றும் குற்றச்சாட்டுக் குறிப்பாணை / குற்றப் பத்திரிக்கை வழங்குவதில் உள்ள தாமதத்திற்கு காரணத்தை கவனித்து அதன்பின் செய்ய வேண்டியதாகும்.

6. மேல் ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதப்படி, தமிழ்நாடு கூடுதல் அட்வகேட் ஜெனரல்-I, குறிப்பிட்டபடி நீதிப்பேராணை மனு எண். 13760/2020ன் விசாரணையின் போது, அதனுடனாக தொகுப்பு வழக்குகள் விசாரிக்கப்படும் போது, இடைக்காலப் பணி நீக்க உத்தரவை ரத்து செய்யக் கோரிய சமயம், மேன்மை பொருந்திய நீதயரசர் கூறிய ஆலோசனைப்படி, அறிவுரைகள் / வழிகாட்டிகள், முதல்

மற்றும் இரண்டில் படிக்கப்பட்டவைகளின்படி, அவைகள் செல்லாதவை யாக்கப்பட்டு, ஒரு தொகுப்பு அரசு ஆணையை வழங்கி அதன்படி அரசு அதிகாரிகள் செயல்படும்படி, இடைக்காலப் பணி நீக்க வழக்குகளை முன்பே முடிக்கக் கருதும் படியும், அதன்படி நீண்ட நாட்கள் இடைக்காலப் பணி நீக்கம் தொடர்ந்து பயனற்ற பட்டுவாடாக்கள் செய்தும், வாழ்க்கைப்படி என்ற பெயரில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எல்லையில்லாக் காலத்திற்கு வழங்கி இடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் எந்த வேலையும் செய்யாமல் பயன் பெறுவது அனுமதிக்கத் தக்க தல்ல.

7. கற்றறிந்த தமிழ்நாடு அட்வகேட் ஜெனரல், அவருடைய கடிதம் ஏழாவதாகப் படித்தபடி, அவர் அரசை, நீதிப் பேராணை மனு எண். 13760/2020ல் மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுப்படி அரசை தக்க அறிவுரைகள் வழங்கும்படி வேண்டிக் கொண்டார்.

8. அரசு இந்தப் பிரச்சனையை மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்ற உத்தரவு அடிப்படையிலும் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள அறிவுரைகளுடன் சேர்த்து பரிசீலித்தது. தற்போதுள்ள அறிவுரைகளின்படி நிலுவையிலுள்ள இடைக்காலப் பணி நீக்க உத்தரவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தக்க கால இடைவெளியில் சீராய்வு செய்யப்பட்டு, அந்த இடைக்காலப் பணி நீக்கம் தொடரப்பட வேண்டுமா அல்லது ரத்து செய்யப்பட வேண்டுமா என வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் பொருத்து ஆராய வேண்டும். இதன்படி தெரிய வருவது, அதுபோன்ற தக்க அலுவலர்கள் அதுபோன்ற சீராய்வுகளைக் குறித்த காலத்தில்

செய்வதில்லை, அதன் பயனாக பல வழக்குகளில் உயர்நீதிமன்றத்தால் பல எதிர் குறிப்புரைகள் பிறப்பிக்கப்படுகின்றன மற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இந்த விசயத்தில் தக்க நடவடிக்கையெடுக்க வேண்டப்படுவதுடன் இது சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு முடிவில்லாமல் பிழைப் பூதியம் வழங்குவதை நிறுத்திவிடவும் அவரிடமிருந்து எந்த வேலையும் பெறாமல் பட்டுவாடா செய்யப்படுவதை எதிர்த்தும் உள்ளது.

9. இவை மட்டுமின்றி முதல் கடிதத்தில் படிக்கப்பட்ட கால வரை குறிப்பிட்டபடி, ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளை விரைந்து முடிக்க வழங்கப்பட்ட அறிவுரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பின்பற்றப் படுவதில்லை எனத் தெரிய வருகின்றது. அரசு சொல்லப்பட்ட அறிவுரைகளை அவ்வப்போது மறு பரிசீலினை செய்ய அறிவுறுத்தினாலும் கூட, சொல்லப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றுவதில் தொய்வு உள்ளது காணப்படுகிறது மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளைச் செயல் படுத்துவதிலும் முடிப்பதிலும் அளவற்ற தாமதம் காணப்படுகின்றது. பல வழக்குகளில் அதுபோன்ற தேவையற்ற தாமதம் பல வழக்குகளுக்கு வழி வகுக்கின்றன; அதனால் குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு சாதகங்களும் / துன்புறுத்தல்களும் ஏற்படுகின்றன. நியாயமில்லாத தாமதங்களால், சட்டப்படியான நீதிமன்றம் ஒழுங்குமுறை நடவடிக்கையை விட்டுவிட உத்தரவு பிறப்பிக்கும் நிலை ஏற்படுகிறது; அதன் விளைவாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அலுவலர்கள் தவறு செய்த அலுவலர்கள் மீது எந்த தண்டனையும் வழங்க இயலாத நிலை ஏற்படுகின்றது; ஒரு சமயம் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால்கூட மேற்கண்டபடி தண்டனை வழங்க இயலா நிலை ஏற்படுகிறது.

10. மேலும், துறை ரீதியான நடவடிக்கைகளை முடிக்க எடுத்துக் கொள்ளும் அளவில்லாத தாமதம், சம்பந்தப்பட்ட துறைகள் காரணமாக நீதிப் பேராணை மேல்முறையீடு எண். 646/2021ல் மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்றம் எதிர் பாதிக்கப்படும் குறிப்புகளை வழங்கிய நிலை ஏற்பட்டது. மேற்கூறப்பட்ட நீதிப் பேராணை மேல்முறையீட்டில் மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்புரை 15.09.2021 நாளிட்டதில் அரசுக்கு உத்தரவிட்டு துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையில் தக்க நடவடிக்கை எடுத்து அந்த நடவடிக்கைகளின் ஒவ்வொரு நிலையிலும் வெளிப்பக்க காலவரம்பை நிர்ணயிக்கும்படி உத்தரவிட்டது.

11. அரசு மிகுந்த கவனத்துடன் பரிசீலித்து மேல் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் சிறிது திருத்தங்கள் மேற்கொண்டு கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்தது:-

(i) இடைக்காலப் பணி நீக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் அதிகாரம் மிகக் கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் உத்தரவிடப்பட வேண்டும். ஒரு இடைக்காலப் பணி நீக்க உத்தரவு வழங்கப்படுமுன், சம்பந்தப்பட்ட அதிகாரி அவர் மனதைத் தெளிவுபடுத்தி இது அவசியமா என முடிவு செய்தல் வேண்டும். நீண்ட நாள் பணி இடை நீக்கம் என்பது அரசு அந்த அரசு ஊழியரிடம் எந்த வேலையும் பெறாமலேயே ஊதியம் வழங்குகிறது. மேற்கண்ட நிலையைக் கண்ணுறும் போது, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரி அனைத்து தக்க பொருண்மைகளையும் பரிசீலித்து மற்றும் அவர் காரணத்துடனான முடிவைப் பதிவு செய்து அந்த அரசு ஊழியரைப் பொது நன்மை அக்கரை காரணமாக இடைக்காலப் பணி

நீக்கம் செய்வதை உறுதிப்படுத்தாமல் பணி நீக்க நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

(ii) ஒரு அரசு ஊழியர் இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், அதுபோன்ற நடவடிக்கை உடனே துவங்கப்பட்டு, பொதுவாக ஆறு மாத காலத்தில் இறுதி செய்யப்பட வேண்டும்.

(iii) சில வழக்குகளில் அரசு ஊழியர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு, அந்த சங்கதி இயக்குனர், கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு அவர்களுக்கு புலனாய்விற்காக அனுப்பப்பட்டால், பின்னவர் விசாரணையை முடித்து அவருடைய அறிக்கையை கண்காணிப்பு ஆணையர் மூலமாக அரசுக்கு ஒரு வருடத்திற்குள் அனுப்ப வேண்டும்.

(iv) மேற்குறிப்பிட்ட (ii) மற்று (iii)ற்கு முன்வைக்கப்பட்ட வழக்குகளில், யார் இடைப் பணி நீக்க உத்தரவு பிறப்பித்தாரோ அவர் அல்லது கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குனர் எவ்வாறாயினும் அவ்வாறு, மூன்று மாத காலம் முடிவடைவதற்குள் அவர்கள் துறைத் தலைமை / அரசுக்கு குறிப்பிட்டு ஒழுங்கு நடவடிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றம் / இயக்குனர் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு சம்பந்தப் பட்டவர்கள், என்ன காரணத்தால் வேலை முடிக்கப்படவில்லை மற்றும் இன்னும் தேவையான கால அவகாசம், ஒழுங்கு நடவடிக்கை / புலனாய்வு முடிவடையத் தேவையான காலம் குறித்தும் மற்றும் பணி இடை நீக்கத்தைத் தொடர வேண்டிய காரணம் குறித்தும், அவ்வாறு பணி இடை நீக்கம் தொடரப்பட வேண்டிய அத்தியாவசியம் குறித்தும் மேற்கண்டவாறு

அறிக்கை அனுப்ப வேண்டும். முதல் முறை நடவடிக்கையைத் துவங்கிய அதிகாரி ஒரு சமயம் துறைத் தலைவராக இருந்தால் அவர் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

(v) ஆரம்ப அறிக்கை மேற்கண்ட (iv) இனத்தின்படி தெரிவித்தபின், அரசுக்கு ஒவ்வொரு மூன்று மாத இறுதியிலும் அறிக்கை அனுப்பப்பட வேண்டும்; அதன்படி அரசு இடைக்காலப் பணி நீக்கம் பற்றி சீராய்வு செய்து அதன் முன்னேற்றத்தைக் கவனிக்கும்; மற்றும் அதுபோன்ற நடவடிக்கைக்கு விரைவில் முடிக்கப்பட வேண்டியது உறுதியளிக்கப்பட வேண்டும்.

(vi) துறைத் தலைமை அல்லது அரசு எவ்வாறாயினும், அது ஒழுங்கு முறை நடவடிக்கை பொருள் குறித்து பரிசீலனை செய்து அல்லது புலனாய்வாயினும் அதன் முன்னேற்றம் குறித்து அறிக்கை அனுப்பி, இடைக்காலப் பணி நீக்கம் தொடர்ந்து மூன்று மாதத்திற்கு மேலும் இருக்க வேண்டுமா / அறு மாதத்திற்கா என முடிவெடுத்தல் வேண்டும். எங்கு அரசே இடைக்காலப் பணி நீக்கத்திற்கு உத்தரவிட்டதோ, மேற்கூறப்பட்ட அதே வழியில் வழக்கைப் பரிசீலித்து அதே போன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

(vii) ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்கள் வழக்கை நடைமுறைப் படுத்துவதிலும் முன்னேற்றத்திலும் தாமதமாவது அரசு ஊழியரின் சூழ்ச்சியாலா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அறிவிப்புகள் அவர்களிடம் எந்த கால விரையமும் இல்லாமல் சேர்க்கப்பட வேண்டிய உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(viii) ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் அவராகவே ஒரு முடிவிற்கு வரும் நிலையில் அல்லது இயக்குனர், கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு புலனாய்வை முடித்த பின், ஒழுங்கு நடவடிக்கை அலுவலர், குற்றப் பத்திரிக்கை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கும் மற்றும் மேல்முறையீட்டு விதிகள், விதி 17(b)யின் கீழ் வழங்கப்பட்டாலோ அல்லது தமிழ்நாடு காவல் துறை கீழமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955ன்கீழ் ஆன விதி 3(b)யின்படி குற்றப் பத்திரிக்கை வழங்கப்பட்டாலோ, அதில் நிலை நிறுத்தப்பட்ட பொருண்மைகளைப் பரிசீலித்து அதன்படி குற்றங்கள் என்ன விதத்தில் உள்ளன என்று அவை பொது நலன் அக்கரை கருதியா என்பதை ஆராய்ந்து ஏற்கனவே இடைக்காலப் பணி நீக்கத்தில் உள்ள அரசு ஊழியரின் இடைக்காலப் பணி நீக்க காலம் மேலுள்ள நடவடிக்கைக்குத் தொடர வேண்டுமா என ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் முடிவு செய்தல் வேண்டும்.

(ix) மேற்கூறப்பட்ட கால வரை முறைகள் குற்றவியல் நடைமுறை வழக்கு துவங்கப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்குப் பொருந்தாது. எவ்வாறாயினும் அதுபோன்ற குற்றவியல் வழக்கிற்கு அங்கீகாரம் வழங்கப்படும் போது, மேல் (viii)ல் கூறியபடியான அதே மாதிரியான பரிசீலனை அது வழங்கும் தக்க அதிகாரியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(x) மேற்கண்ட (vi), (viii) அல்லது (ix) இனங்களிலான வழக்குகள் பரிசீலிக்கப்படும் போது, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17(e)(6)ன்கீழ் மற்றும் தமிழ்நாடு காவல் துறை (ஒழுங்கு நடவடிக்கை

மற்றும் மேல்முறையீட்டு) விதிகள் 1955ன்படி விதி 3(e)(5)ன்கீழ் வழக்குக்கு ஏற்றவாறு இடைக்காலப் பணி நீக்கம் தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியம் இல்லை, இடைக்காலப் பணி நீக்க உத்தரவு மேற்கண்ட விதிகளில் வழங்கப்பட்ட அதிகாரப்படி ரத்து செய்யப்படலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

(xi) வழக்குகளில் குற்றம் குற்ற வழக்குகள்படி அமைத்து சட்டத்தின் குழறுபடிக் கேள்விகளுக்கு உட்பட்டால் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர், துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை, நடவடிக்கைகளை இறுதி செய்யப்பட இயலாத நிலையிலிரந்தால் மற்றும் அந்த குற்றவியல் வழக்கு கண்காணிப்பு அறிக்கை அடிப்படையில் ஒரு சட்ட நீதிமன்றத்தின் முன் நிலுவையில் இருந்தால், அதற்கான காரணங்கள் வெளிப்படையாக விளக்கப்படாத நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரி இடை நீக்கத்தை சீராய்வு செய்து தக்க கண்காணிப்பு அதிகாரி / கண்காணிப்பு ஆனையம், வழக்குக்கு வழக்கு என்ற அடிப்படையில் கலந்தாலோசித்து, பார்வை காரணமான நீண்ட நாட்கள் பணி இடை நீக்கம் ஒரு அரசு ஊழியரிடமிருந்து எந்த வேலையும் பெறாமல் அவருக்கு வாழ்வாதாரப்படி என்ற வகையில் வழங்கப்படுவது ஏற்றுக் கொள்ளத் தக்க தல்ல என்ற நிலையில், முடிவு எடுக்கக் கூடிய அதிகாரி அவ்வாறான அரசு ஊழியரின் இடைக்காலப் பணி நீக்கத்தை ரத்து செய்து அந்த அரசு ஊழியரை முக்கியத்துவம் இல்லாத பதவியில் பணியமர்த்தலாம். அதுபோன்ற ரத்து, இடைக்காலப் பணி நீக்கம் சம்பந்தமான ஒவ்வொரு வழக்கு பற்றிய பொருண்மைகளை ஆராய்ந்து மற்றும் அதன் காரணத்தை அறிந்து அதன்படி குற்றச்சாட்டுக் குறிப்பாணை / குற்றப் பத்திரிக்கை

வழங்குவதில் தாமதம் காரணமா என்பதறிந்து முடிவெடுக்கலாம் மேன்மை பொருந்திய மெட்ராஸ் உயர்நீதிமன்றம், P. கண்ணன் வழக்கில் மேல் பாரா 5ல் கூறப்பட்டுள்ளதை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(xii) மேற்கூறப்பட்ட பத்தி (x)ன்படி அது ரத்து செய்யப்படாத வரையில் இடைக்காலப் பணி நீக்கம் நடைமுறையில் இருக்கும்.

12. மேலும் அரசு, அரசுக் கடிதம் 1ல் படித்தபடியுள்ள ஒழுங்கு முறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த விதிக்கப்பட்ட வழி முறைகளை இதன் மூலம் மாற்றியமைத்து, நடவடிக்கையில் தேவையற்ற தாமதங்களை இல்லாது செய்ய உறுதி செய்கிறது, அவை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| (i) | கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு பிரிவில் புலனாய்வை முடித்து கண்காணிப்பு ஆணையர் மூலம் அரசுக்கு அறிக்கை அனுப்புதல் | ஒரு வருடம் |
| (ii) | தீர்ப்பாயத்தில் விசாரணையை முடித்து அதனுடைய தீர்வுகளை தலைமைச் செயலகத் துறைக்கு அனுப்ப | ஒரு வருடம் |
| (iii) | தீர்வாயத்திலிருந்து பெறப்பட்ட தீர்வின் அடிப்படையில் அரசு / துறைத் தலைமை இறுதி உத்தரவுகள் பிறப்பிக்க | நான்கு மாதங்கள் |

**துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஒவ்வொரு நிலையைக் கடக்கும் போதும் அதற்கான கால அளவு:-**

| | | |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதிகள் 17(a)ன்படி விளக்கம் கேட்டல் அல்லது 17(b)ன்படி குற்றப் பத்திரிக்கை வனைதல், தவறு கவனத்திற்கு வந்தபின் மேற்படி விதிகளின்படி | 15 நாட்கள் |
| | தமிழ்நாடு காவல் துறை கீழமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதிகள் 3(a)ன்படி விளக்கம் கேட்டல் அல்லது | |

| | | |
|---|---|---|
| | 3(b)ன்படி குற்றப் பத்திரிக்கை வனைதல், தவறு கவனத்திற்கு வந்தபின் மேற்படி விதிகளின்படி | |
| | ஒழுங்கு நடவடிக்கையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் விதி முடிவு செய்யப்படுவது மிக முக்கியம் மற்றும் ஒழுங்கு முறை நடவடிக்கை அதிகாரிகள் தவறின் தன்மையை அறிந்து விதிகளை முடிவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றன | |
| (ii) | குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் ஆவணங்களைப் பார்த்து அவருடைய விளக்கம் பெற | 30 நாட்கள் |
| (iii) | விளக்கம் பெறப்பட்ட பின் தேவைப்படும்படி, விசாரணை அதிகாரி நியமனம் செய்தல் | 7 நாட்கள் |
| (iv) | விசாரணை அதிகாரி விசாரணையை முடித்து விசாரணை அறிக்கை சமர்ப்பித்தல் | 30 நாட்கள் |
| (v) | விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை கிடைத்த பின் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் முடிவு எடுக்க | 10 நாட்கள் |
| (vi) | விசாரணை அலுவலரின் அறிக்கையின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியிடமிருந்து மேலும் விளக்கம் பெற | 10 நாட்கள் |
| (vii) | தமிழ்நாடு பணித் தேர்வாயத்தின் கருத்துமை பெற, அவர்களைக் கலந்தாலோசிக்கும் சமயம் | 30 நாட்கள் |
| (viii) | துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி உத்தரவு வழங்க | |
| | (அ) அரசு அல்லாத ஒழுங்கு முறை நடவடிக்கை அலுவலர் | 7 நாட்கள் |
| | (ஆ) தலைமைச் செயலகம், மற்ற துறைகளை சுற்றறிக்கை மூலம் கலந்தாலோசித்து உத்தரவு பிறப்பிக்க | 30 நாட்கள் |

மேற்கண்ட காலவரையை அனுசரிக்கும் பொழுது கீழ்க்கண்ட காரண காரியங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

(i) மேற்கண்ட காலவரை பின்பற்றப்பட்டு ஒழுங்கு முறை நடவடிக்கை வழக்குகளில் கால தாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஒழுங்கு முறை நடவடிக்கை மேற்கொள்ளும் பொழுது விதி தேர்ந்தெடுக்கப்படுவது மிக முக்கியம்; ஒழுங்கு முறை அதிகாரிகள் செய்யப்பட்ட தவறுகளுக்கு முறையான தண்டனைக்கு எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் எந்த விதியின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து தக்க முடிவு எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றன. வேறுபாடில்லாத விதி 17(b)யைத் தேர்ந்தெடுத்தல் ஒழுங்கு நடவடிக்கையை இறுதி செய்வதில் கால தாமதத்தை உண்டாக்கும்.

(ii) ஒழுங்கு முறை நடவடிக்கை அதிகாரிகள், ஒரு சமயம் தக்க காரணங்களால் மேற்கூறப்பட்ட கால அளவைப் பின்பற்ற இயலா நிலை ஏற்பட்டால் அவர்களுடைய அடுத்தவர் அதிகாரியிடமிருந்து கால நீட்டிப்பு குறித்து குறிப்பிட்ட உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; அதில் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலைகளை விளக்கிக் கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) சில வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி ஒத்துழைக்காததால் கால தாமதம் ஏற்படின், அவர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விளக்கத்திற்காகவோ, அவர்கள் விசாரணை அதிகாரி முன் தோன்றுவதற்காகவோ எல்லையற்ற காலத்திற்குக் காத்திருக்கத் தேவையில்லை, குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு நிலைவூட்டுக் கடிதம் அனுப்பி அவர்களை விளக்கம் சமர்ப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்; அதன் பின்னும் குற்றம் சாட்டப்பட்ட அலுவலரிடமிருந்து விளக்கம் பெறாவிட்டால், அதற்கு தக்க காரணங்களும் இல்லாவிட்டால், ஒழுங்கு முறை அதிகாரிகள், குற்றம் சாட்டப்பட்டுள்ள அதிகாரிகளால் வழங்க விளக்கம் ஏதுமில்லை என்ற எண்ணத்தில் நடவடிக்கையைக் தொடரவும் அதே போல் குற்றம்

சாட்டப்பட்ட அதிகாரிகள் விசாரணை அதிகாரிகள் முன்பு தோன்றத் தவறினால், எதை தக்க காரணமுமில்லாமல் தோன்றத் தவறும் பட்சம் நினைவூட்டு கடிதம் சேவை செய்து, அவர்களை விசாரணை அதிகாரி தோன்றாத் தரப்பினராக முடிவு செய்து விசாரணையைத் தொடரலாம். அவர்கள் விதிகள், நடைமுறைகளின்படி விசாரணையை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

(iv) இந்த அறிவுரைகள் வழங்கப்படும் நோக்கம், பிரச்சனையின் பின்னால் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளின் தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதாகும். எல்லா நேரத்திலும் கருத்தில் கொள்ள வேண்டியதும் தெளிவாக ஜாபகம் வைத்துக் கொள்ள வேண்டியதும் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளைக் கையாழ்வதில் தவறாமல் அனைத்து விதிகளின் வழி முறைகளையும் சமபிரதாயங்களையும் பின்பற்ற வேண்டும்.

(v) விசாரணை அதிகாரி தரப்பில் அல்லது ஒழுங்கு முறை நடவடிக்கை அலுவலர் தரப்பில் வெளிப்படையான மற்றும் தன்னிச்சையான தாமதம், எவ்வாறாயினும், தக்க காரணங்களின்றி நடைபெறுமாயின், அது குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிக்கு கவசப் பாதுகாப்பாக செயல்படுவதாகக் கருதி, அதுபோன்ற அலுவலர்கள் சம்பந்தமாக மிக வன்மையான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும்.

13. அனைத்து அலுவலர்களும் ஒழுங்கு முறை நடவடிக்கை மேற்கொள்பவர்கள் மேற்கண்ட பாரா 11 மற்றும் 12ன் வழிகாட்டி / கால வரைகளை வன்மமாகக் கடைப்பிடிக்க வேண்டும், அதில் வேறுபாடு இருத்தல் கூடாது. தவறினால் அலவலர்கள் அவர்களுடைய

குற்றத்திற்குக் காரணமானவர்கள் மீது வன்மையான நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இது சம்பந்தமாக அனைத்த தலைமைச் செயலகத் துறைகளும், துறைத் தலைமைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

(மேதகு ஆளுநரின் ஆணைப்படி)

**(ஓம்)**
**இறை அன்பு**
**அரசு தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:-**
அனைத்து கூடதல் தலைமை / முதன்மை / அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

அனைத்துத் துறைத் தலைவர், மாவட்ட நீதிபதிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் உட்பட

செயலாளர், தமிழ்நாடு தேர்வாணையம், சென்னை - 600 003.

பதிவாளர், மேன்மை பொருந்திய உயர்நீதிமன்றம், சென்னை - 104.

இயக்குனர், கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு, சென்னை - 600 015.

ஆணையர், ஒழுங்கு முறை நடவடிக்கைகள் (சென்னை / கோவை / மதுரை / திருச்சிராப்பள்ளி / திருநெல்வேலி / நாகர்கோவில்)

மனிதவள மேலாண்மை (ஆய்வு I, II மற்றும் III) துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

**நகல்:-**
நேர்முக உதவியாளர், அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) சென்னை - 600 009.

அரசு தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை - 9.

கூடுதல் தலைமைச் செயலாளர் கண்காணிப்பு ஆணையர் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்தீரத்தத்துறை ஆணையர், சென்னை - 600 009.

தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள் (O.P. பிரிவுகள்) (அவர்களுடைய துறையினர் அனைவருக்கும் உத்தரவு நகல் வழங்கும்படி வேண்டிக் கொள்ளப்பட்டது)

மனிதவளத் (L1, L2, L3) துறை, சென்னை - 600 009 (5 நகல்கள்)

மனிதவள மேலாண்மை (AR-II) துறை சென்னை - 600 009.

கண்காணிப்பு ஆணையர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009 (10 நகல்கள்)

முதுநிலை தனிச் செயலாளர், அரசு தலைமைச் செயலாளர், மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.

இருப்பு கோப்பு / உதிரிகள்.

(உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது)

**ஒம்**
**பிரிவு அலுவலர்**